தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>இறைவைப் பாசனம் மூலம் ஏரிகள் நிரப்பப்படும்</u>**

கர்நாடகத்தில் இறைவைப் பாசனம் மூலம் ஏரிகள் நிரப்பப்படும் என்று, அந்த மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமலிங்கரெட்டி தெரிவித்தார். பெங்களூரு தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற வேளாண் உற்பத்திப் பொருள்கள் சந்தைப்படுத்தல் சங்கத் தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் பேசியது: பெங்களூரு தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் விவசாயப் பணிகள் நடைபெறுகின்றன. ஆனால், அங்கு பாசனத்திற்கு போதிய தண்ணீர் இல்லை. இந்த பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில், இறைவைப் பாசனத்தின் மூலம் இந்தப் பகுதியில் உள்ள ஏரிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களை காங்கிரஸ் அரசு செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. விவசாய பாக்கியா திட்டத்தின் மூலம் விவசாய நிலங்கள் பண்படுத்தப்படுகின்றன. விவசாயிகளுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெங்களூரு தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் குடிநீர்ப் பிரச்னையைப் போக்க காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்படும் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மாம்பழ விளைச்சல் அதிகரிப்புமார்ச் மாதம் விற்பனைக்கு வருகிறது</u>**

பெங்களூரு:"மாம்பழ விளைச்சல், 2 013 - 14ம் ஆண்டை விட, இந்தாண்டில், 3 - 4 லட்சம் டன் அதிகரித்திருப்பதால், மார்ச் மாதம் விற்பனைக்கு வர வாய்ப்புள்ளது," என, கர்நாடக மாம்பழ வளர்ச்சி துறை இயக்குனர், கமலாக் ஷி ராஜண்ணா கூறினார். பெங்களூருவில், அவர் கூறியதாவது:மாம்பழ

உற்பத்தியில், அரசு தீவிரமாக ஆர்வம் காட்டி வருகிறது. கடந்த 2013 -- 14ல், மாம்பழ உற்பத்தி, 8 லட்சம் டன். இந்தாண்டு விளைச்சல், 11 -- 12 லட்சம் டன் வரை உயர வாய்ப்பு உள்ளது.மாம்பழ உற்பத்திக்காக, விவசாயிகளுக்கு அரசு மானியம் அளிக்கிறது. இதற்கு முன், மாம்பழ விற்பனைக்கு, வாய்ப்பு குறைவாக இருந்தது. அரசு, விற்பனைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால், மாம்பழ விவசாயிகள், இம்முறை உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர். இதனால், மே மாதம் துவங்க உள்ள மாம்பழ சீசன், இம்முறை மார்ச் மாதம் துவங்க வாய்ப்புள்ளது. மாம்பழத்துக்கான அடையாளத்தை பெற, மாம்பழ வளர்ச்சி துறை, சென்னைக்கு விண்ணப்பித்து உள்ளது. இதன்மூலம், மாநிலத்தின் மாம்பழங்களுக்கு, தனி அடையாளம் கிடைக்கும். கடந்தாண்டு, மாநில அளவில், 1.6 லட்சம் எக்டேர் பரப்பளவில், மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தாண்டு, 1.8 லட்சம் எக்டேர் பரப்பளவில், மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாம்பழ உற்பத்தியில் மகாராஷ்டிரா, தமிழகம், ஆந்திராவை போன்று, கர்நாடகாவும் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. கர்நாடகாவில் விளையும் மாம்பழங்களில் பதாமி, பங்கனபள்ளி, மல்லிகா, சிந்துரா, மல்கோவா, தோதத்தாபுரி, நீலம், கேசர், அம்ரபாலி ஆகியவை பிரசித்தி பெற்றவை. இந்த ரக மாம்பழங்கள் பெலகாவி, சார்வார், தார்வாட், ஹாவேரி, கோலார், சிக்பல்லாபூர், துமகூரு, மைசூரு ஆகிய மாவட்டங்களில் விளைகின்றன. இயற்கை பாதிப்புகளால், மாம்பழ உற்பத்தியில், 4,000 ஏக்கர் நிலத்தை மாநிலம் இழந்துவிட்டது. விளைச்சல் நில பரப்பு குறுகிவிட்டபோதிலும், மாம்பழ உற்பத்தியில் பாதிப்பில்லை. இவ்வாறு, அவர் கூறினார்.

## கொங்கணாபுரம் சங்கத்தில் ரூ.2.24 கோடி பருத்தி ஏலம்

இடைப்பாடி : கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்க மார்க்கெட்டில், இரண்டு நாட்களாக நடந்த ஏலத்தில், ரூ. 2.24 கோடிக்கு பருத்தி விற்பனை நடந்தது. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் உள்ளது. கொங்கணாபுரத்தில் தரமான பருத்தி கிடைப்பதால் பருத்தி ஏலத்தில் கலந்து கொள்வதற்கு உள்ளூர்

வியாபாரிகள், கோயமுத்தூர், அவினாசி, சேலம், திருப்பூர், ஊத்தங்கரை, கோவில்பட்டி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி சேர்ந்த விவசாயிகள், பங்கேற்கின்றனர்.கொங்கணாபுரம் கிளை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்களில் நடந்த பருத்தி ஏலத்தில், 14 ஆயிரத்து120 பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. அதில் பி.டி., ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு 3,810 முதல் 4,390 ரூபாய் வரையும், டி.சி.எச்., ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு 4,450 முதல் 5,030 ரூபாய் வரையும் ஏலம் போனது. இரண்டு நாட்களில், இரண்டு கோடியே 24 லட்சத்து 3,000 ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.

## கோடை சீசனுக்கு தயாராகிறது ஊட்டி தாவரவியல் பூங்கா

ஊட்டி : ஊட்டி பூங்காவை, கோடை சீசனுக்கு தயார்படுத்தும் நோக்கில், நடவுப்பணி துவங்கியது. நீலகிரி மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்களில் துவங்கவுள்ள கோடை சீசனை முன்னிட்டு, ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி, ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சி, குன்னூார் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி என, பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.கோடை சீசனுக்கு ஊட்டி தாவரவியல் பூங்காவை தயார்படுத்தும் நோக்கில், மலர் செடிகள் நடவுப் பணியை மாவட்ட கலெக்டர் சங்கர், நேற்று துவக்கி வைத்தார்.ஹாலந்து, ஸ்பெயின், ஜெர்மனி உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து, புதிய வகை மலர் விதைகள் தருவிக்கப்பட்டுள்ளன. இந்தாண்டு பூங்காவில் நடவு செய்யப்பட உள்ள மலர் செடிகளில், 90 சதவீதம் வெளிநாட்டு மலர் செடிகளாக இருக்கும் என, பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளது. 3.50 லட்சம் மலர் செடிகள் இந்தாண்டு, பார்வையாளர்களை பரவசப்படுத்த உள்ளன. 15 ஆயிரம் தொட்டிகளில், பல வண்ண மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளன. இத்தாலியன் பூங்காவை ஒட்டியுள்ள, சாய்தளமான புல் தரை, பூங்காவாக மாற்றப்பட்டு, அங்கு பல வண்ண மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளன. குன்னூார் சிம்ஸ்பூங்கா, காட்டேரி பூங்காவிலும் நடவுப் பணி துவங்கியது. நிகழ்ச்சியில், மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர்

மணி, தாவரவியல் பூங்கா உதவி தோட்டக்கலை இயக்குனர் உமாராணி ஆகியோர் பங்கேற்றனர்.

## மாதிரி தோட்டம் ! : மாவட்டத்தில் முதல்முறையாக காய்கனிகளின் :விவசாயிகள் விளைச்சலை நேரடியாக பார்க்க முடியும்

காஞ்சிபுரம்: காய்கனி விதைகளின் வீரியத்தையும், தன்மையையும் விளைச்சல் மூலமாக விவசாயிகள் நேரடியாக கண்டறிய, காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதல்முறையாக, மாதிரி தோட்டத்தை தோட்டக்கலை துறை அமைத்துள்ளது. தமிழகத்தில், விவசாய துறையின் முக்கிய அங்கமாக தோட்டக்கலை துறை விளங்கி வருகிறது. நெல், கரும்பு, பருத்தி போன்றவை மட்டுமல்லாமல், காய்கனிகளையும் விளைவித்து விவசாயிகள் முன்னேற, தோட்டக்கலை துறை பெரிதும் உதவி வருகிறது. தோட்டக்கலை துறை முடிவு விவசாயிகளுக்கு, அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வெண்டை, கத்திரி, தக்காளி மற்றும் பழ வகைகளின் விதைகளை, தோட்டக்கலை துறை மானிய விலையில் வழங்குவது வழக்கம். ஒரு சில வீரிய விதைகளை பயன்படுத்தி, லாபம் அடையவும் அறிவுரை வழங்கி வருகிறது. அவ்வாறு அறிவுறுத்தப்பட்டு விதைக்கப்படும் காய்கனிகளின் முளைப்பு திறனை, விளைந்த பிறகே விவசாயிகள் தெரிந்து கொள்ளும் சூழல் இருந்து வந்தது. இதனால், ஒரு சில விதைகள் மூலம் அதிக விளைச்சல் கிடைக்கப் பெறாமல் போவதற்கும் வாய்ப்பு இருந்தது. இதை தவிர்க்கவே, காய்கனிகளின் விளைச்சலை மாதிரி தோட்டம் மூலம் விவசாயிகளுக்கு காண்பிக்க, மாவட்ட தோட்டக்கலை துறை முடிவு செய்தது.இந்த மாதிரி தோட்டம் மூலம் சொட்டு நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவம்; துறை மூலம் வழங்கப்படும் விதைகளின் விளைச்சல் திறன் ஆகியவற்றை விவசாயிகள் நேரடியாக தெரிந்து கொள்ள முடியும்.அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை துறையின் பண்ணைகளில் மாதிரி தோட்டத்தை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டது. ஓரளவு ஏற்ற தட்பவெப்ப சூழலுடன் உள்ள ஆத்தூர் மற்றும் விச்சாந்தாங்கல் பண்ணைகளில், வெண்டையின் மாதிரி தோட்டங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரி தோட்டங்களை, விவசாயிகள் நேரடியாக பார்த்து, அதன் விளைச்சலை தெரிந்து கொள்ளலாம் என, தோட்டக்கலை

துறை அறிவித்துள்ளது.தற்போது, வெண்டை விதைக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள நிலத்தில், மிளகாய், தர்பூசணி ஆகியவை விரைவில் பயிட, தேட்டக்கலை துறை திட்டமிட்டு உள்ளது. எனவே, இந்த மாதிரி தோட்டத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள, துறை அதிகாரிகள், விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர். விவசாயிகளுக்கு வேண்டுகோள்காஞ்சிபுரம் மாவட்ட தோட்டக்கலை துறையின் துணை இயக்குனர் (பொறுப்பு) கோல்டி பிரேமாவதி கூறியதாவது: மாவட்டத்தில் ஆத்தூர், விச்சாந்தாங்கல் ஆகிய இரண்டு பண்ணைகளில் இந்த மாதிரி தோட்டங்கள் அமைத்துள்ளோம். மற்ற மூன்று பண்ணைகளில் மாதிரி பண்ணைகள் அமைக்க ஏதுவான தட்பவெப்ப நிலை இருந்தால், அந்த பண்ணைகளிலும் ஏற்படுத்தப்படும். காய்கனிகளின் விளைச்சல், சொட்டு நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை இந்த மாதிரி தோட்டம் மூலம் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். எனவே, இந்த தோட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>ஆத்தூர் சங்கத்தில் ரூ.10 லட்சம் மஞ்சள் ஏலம்</u>

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 300 மூட்டை மஞ்சள், 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை, உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, விற்பனை சங்கத்தில், நடந்த மஞ்சள் ஏலத்தில், கடலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய வெளி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 30 விவசாயிகள் விளைவித்த, 300 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.விரலி மஞ்சள் ஒரு குவிண்டால், 6, 699 முதல் 9, 500 ரூபாய் வரை, உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால், 5, 699 முதல் 8, 600 ரூபாய் வரை, பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால், 11, 899 முதல் 15,500 ரூபாய் வரை, விற்பனையானது.ஏலத்தில், 300 மூட்டை மஞ்சளை, 10 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர். மஞ்சள் விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ஆணைமடுவு அணை புனரமைப்பு: ஆயக்கட்டு விவசாயிகள் மகிழ்ச்சி**

வாழப்பாடி : வாழப்பாடி அடுத்த, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணையை, உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ், 2.22 கோடி ரூபாயில் புனரமைப்பு செய்திட, மத்திய நீர்வளத்துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. வாழப்பாடி அடுத்த, அருநூற்றுமலை மற்றும் சந்துமலை வனப்பகுதியில், வழிந்தோடும் நீரோடைகள் சங்கமித்து வசிஷ்டநதி உற்பத்தியாகிறது. புழுதிக்குட்டை கிராமத்தில், இரு மலைக்குன்றுக்கு இடையே பாயும் அந்நதியின் குறுக்கே, 67.25 அடி உயரத்தில், 267 மில்லியன் கனஅடி தண்ணீர் தேங்கும் வகையில், 234 ஏக்கர் பரப்பளவில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன், ஆணைமடுவு அணை கட்டப்பட்டது.அணையிலிருந்து புழுதிக்குட்டை, குறிச்சி, கோணஞ்செட்டியூர், கண்ணுக்கானூர், சி.என்.பாளையம், சி.பி.வலசு, நீர்முள்ளிக்குட்டை, கோலாத்துகோம்பை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில், 5,011 ஏக்கர் விளை நிலங்கள் ஆயக்கட்டு அணைப்பாசன வசதி பெறுகின்றன. இருபது ஆண்டுகளை கடந்த ஆணைமடுவு அணையின் உபநீர் வெளியேற்றும் ராட்சத மதகுகள், வலது மற்றும் இடது வாய்க்கால் மதகுகளும், ஷட்டர் இயக்கும் இயந்திரங்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே, அணையை புனரமைப்பு செய்ய வேண்டுமென, ஆயக்கட்டு விவசாயிகள் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பிற்கு கோரிக்கை விடுத்தனர்.இதையடுத்து, உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ. 2.22 கோடியில் ஆணைமடுவு அணையை புதுப்பிக்க தமிழக அரசின் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) அதிகாரிகள், மத்திய நீர்வளத்துறைக்கு பரிந்துரை செய்தனர்.அத்திட்டத்தின் கீழ் ஆணைமடுவு அணையை புதுப்பிக்க, மத்திய நீர்வளத்துறை அனுமதியளித்துள்ளது. மாநில அரசு நிதியில் திட்டத்தை நிறைவேற்றவும், அதற்கான தொகையை பின்னிட்டு வழங்கவும் மத்திய அரசு ஒப்புதல்அளித்துள்ளதால், அணை புனரமைப்பு பணிகள், இந்தாண்டு துவங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.அணையை புதுப்பிக்க, மத்திய, மாநில அரசுகள் முடிவு செய்துள்ளதால், ஆணைமடுவு அணைப்பாசன ஆயக்கட்டு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இதில்,

பசுமை வனவாசி ஒருங்கிணைப்பாளர் கல்யாணசுந்தரம், பன்னீர்செல்வம் உள்பட, சன்மார்க்க சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அறுவடை நிலை குறித்து புள்ளியியல் துறையினர் ஆய்வு

கிருஷ்ணகிரி: காவேரிப்பட்டணம் அருகே அறுவடை நிலை குறித்து, புள்ளியியல் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் யூனியன், கம்புகாலப்பட்டியில், பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் கீழ் உளுந்து பயிர் அறுவடை பரிசோதனையை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். சேலம் மண்டல புள்ளியியல் இணை இயக்குனர் கமலக்கண்ணன் முன்னிலையில், இந்த ஆய்வு நடந்தது. இதுகுறித்து, அவர் கூறியதாவது: விவசாய கொள்கைகளை வகுப்பதற்கும், உணவு பொருட்கள் உற்பத்தியில் பருப்பு உற்பத்தியை பெருக்குவதற்கும், விவசாயம் சம்பந்தமான திட்டங்களை தீட்டுவதற்கும் இப்பயிர் மதிப்பீட்டு ஆய்வு பரிசோதனை நடத்தப்படுகிறது. மேலும், மாவட்டத்தில், ஒவ்வொரு பயிருக்கும் சராசரி விளைச்சல், மொத்த சாகுபடி பரப்பு மற்றும் மொத்த விளைச்சல் ஆகியவற்றை கணித்து, உணவு உற்பத்தி தொடர்பான திட்டங்கள் தீட்ட ஏதுவாக, அறுவடை பரிசோதனைகள், மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன், வருவாய் துறையில் பேணப்படும் பதிவேடுகளின் அடிப்படையில் பயிர் சாகுபடி பரப்பு சரியாக பதியப்பட்டுள்ளதா என உறுதி செய்து, சர்வே எண் மற்றும் பரிசோதனை திடல் சரியாக தேர்வு செய்யப்பட்டுள்ளதா என, உறுதி செய்த பின் வருவாய்துறை, புள்ளியியல் துறை, வேளாணமை துறை ஆகிய துறைகள் இணைந்து அறுவடை பரிசோதனைகள் நடத்தப்படுகிறது. இவ்வாறு கூறினார். ஆய்வின் போது, மாவட்ட புள்ளியியல் துணை இயக்குனர் மனோகரன், வட்டார புள்ளியியல் ஆய்வாளர் கலைச்செல்வி, வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள், வி.ஏ.ஓ.,க்கள், விவசாய சங்க தலைவர் ராமலிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சம்பா நெல் பயிர்கள் அறுவடைக்கு தயார்

தோகைமலை: தோகைமலை பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா நெல் பயிர்கள் அறுவடைக்கு வரும் தருவாயில் உள்ளது. கரூர் மாவட்டம், தோகைமலை அருகே உள்ள நெய்தலூர், சேப்ளாப்பட்டி, ஆர்ச்சம்பட்டி, முதலைப்பட்டி, நங்கவரம், நச்சலூர், காலனி, குறிச்சி, சூரியனூர் போன்ற பகுதிகளில் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், சம்பா நெல் நடவு செய்தனர். இந்த ஆண்டு பருவமழை கணிசமான அளவில் பெய்து வந்ததால், காவிரி நீர் வரத்தும் அதிகமானது. கட்டளைமேட்டு வாய்க்கால் பகுதியில் இருந்து பாசனத்திற்காக நீர் திறந்து விடப்பட்டதால், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்திற்கு முன், ஆந்திரா பொன்னி, கர்நாடகா பொன்னி, பொன்மணி போன்ற நெற் பயிர்களை நடவு செய்திருந்தனர். தற்போது, இப்பயிர்கள் வரும் ஜனவரி மாத இறுதியில் அறுவடைக்கு வரும் தருவாயில் உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## க.பரமத்தியில் பருவமழை மானாவாரி பயிர் அதிகரிப்பு

க.பரமத்தி: க.பரமத்தி சுற்று வட்டார கிராமப்புறங்களில் பருவமழை அதிகரிப்பால், கம்பு, கேழ்வரகு, சோளம் உள்ளிட்ட மானவாரி பயிர் விளைச்சல் அமோகமாக உள்ளது. கிராமப்புறங்களில் பாரம்பரிய உணவு தானியங்களில் கம்பு, கேழ்வரகு, சோளம் போன்றவை முக்கிய இடத்தை வகிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை பெய்யும் போது, மானாவாரியில், பாரம்பரிய உணவு தானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படும். கடந்த சில ஆண்டுகளாக பருவமழை தவறியதால், விவசாய நிலங்கள் புல்வெளியாக மாறியது. கிராமப்புறங்களில் பாரம்பரிய உணவு தானியங்கள் சாகுபடியும், கால்நடை வளர்ப்பும் குறைந்து போனது. நடப்பாண்டு பருவமழை கை கொடுத்ததால், கிராமப்புறங்களில் உள்ள மானாவாரி நிலங்களில் கம்பு, சோளம், கேழ்வரகு போன்றவை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, அவை அறுவடை தருணத்தில் உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பயறு வகைகள் அதிகம் சாகுபடிக்கு அழைப்பு

தஞ்சாவூர் : பயறு வகைளை அதிகளவில் சாகுபடி செய்ய வேண்டும்,' என தஞ்சை மாவட்ட சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: புரதசத்து பற்றாக்குறையை போக்க உளுந்து, பச்சை பயறு, துவரை போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும். இவ்வகை பயிர்களை தனிப்பயிராக வோ, பிற பயிர்களுடன் ஊடு பயிராகவோ, கலப்பு பயிராகவோ, வரப்பு பயிரா கவோ பயிரிட்டு மகசூலை அதிகரிக்க செய்ய வேண்டும். மனிதனுக்கு, நாளொன்றுக்கு, 85 கிராம் புரதசத்து தேவைப்படுகிறது. தற்போது, 36.5 கிராம் புரதசத்து மட்டுமே நமக்கு கிடைக்கிறது. மேலும், 48.5 கிராம் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்த சத்து உளுந்து, பாசி பயறு, துவரை, தட்டை பயறு, மொச்சை, கொண்டக்கடலை, பட்டாணி, போன்ற பயறுவகை பயிர்கள் மட்டுமே கொடுக்கிறது. இக்குறையை போக்க, பயறு வகை பயிர்களை அதிகம் சாகுபடி செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

## நிலக்கடலை சாகுபடி மானியத்தில் ஜிப்சம்

குஜிலியம்பாறை : நிலக்கடலை சாகுபடியை ஊக்குவிப்பதற்காகவும், மகசூலை அதிகரிப்பதற்காகவும் விவசாயிகளுக்கு தேவையான ஜிப்சத்தை மானியத்தில் வழங்க வேளாண் துறை முடிவு செய்துள்ளது. குஜிலியம்பாறை ஒன்றியத்தில் உள்ள கூம்பூர், ஆர்.வெள்ளோடு, ஆர்.கோம்பை, பாளையம், கூடலூர் பகுதிகளில் நிலக்கடலை அதிக பளப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஓரமான நிலக்கடலைக்கு மார்க்கெட்டில் அதிக தேவை இருப்பதால் சாகுபடியை ஊக்குவிக்க வேளாண் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நிலக்கடலையில் கூடுதல் மகசூல் மற்றும் பொக்கில்லாத தரமான விதைகளை பெற நடவு செய்த 40 வது நாளிலிருந்து இரண்டாவது களை எடுக்கும்வரை ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடவேண்டும். இந்த ஜிப்சத்தில் கந்தகம் மற்றும் சுண்ணாம்புச்சத்து இருப்பதால் பயிர்களின் விழுதுகள் கெட்டித்தன்மை பெறும். காய்ப்புத்தன்மை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 கிலோ வீதம் மானியத்தில் ஜிப்சம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள்

வருவாய் சான்றுடன் வேளாண் வட்டார விரிவாக்க அலுவலகத்தை அணுகுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு உரம் வழங்கல்

வருஷநாடு : வருஷநாடு தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் உரம் வழங்கும் விழா வருஷநாட்டில் நடந்தது. தென்னை வளர்ச்சி வாரிய இயக்குனர் லூாங்கார்ஓபைத் தலைமை வகித்தார். தென்னை வளர்ச்சி வாரிய கள அலுவலர் பரமசிவம், மாவட்ட தலைவர் பன்னீர்ச்செல்வம், மாவட்ட செயலாளர் வேல்முருகன், வருஷநாடு தென்னை விவசாய சங்கத்தலைவர் மகாலிங்கம், பசுமலைத்தேரி தென்னை விவசாயசங்கத்தலைவர் ராமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்னை விவசாயி களுக்கு ரசாயன உரம் வழங்கப்பட்டது. வருஷநாடு பகுதி தென்னை விவசாய சங்க செயலாளர்கள் வருசைக்கனி, சுரேஷ், குணசேகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம்; விவசாய, தோட்டக்கலைத்துறை சுறுசுறுப்பு

தேனி : விவசாய, தோட்டக்கலைத்துறை சார்பில் "இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம்' என்ற புதிய கோஷத்தை உருவாக்கி இதற்கேற்ற வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பருவமழை அதிகம் பெய்து, அணைகள், கண்மாய்களில் நீர் இருப்பு போதிய அளவு உள்ள நிலையில் விவசாய, தோட்டக்கலைத்துறையின் சார்பில் களப்பணியாளர்கள் விவசாயிகளை சந்தித்து தொழில்நுட்ப செய்திகளையும், தகவல்களை வழங்கி வருகின்றனர். இதன்படி விவசாய, தோட்டக்கலைத்துறை களப்பணியாளர்கள் வாரத்தில் குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப செய்திகளை வழங்குகின்றனர். விவசாயிகளின் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்து தொழில்நுட்ப உதவிகள் வழங்குகின்றனர். இதற்காக விவசாயிகளை ஒருங்கிணைத்து குழு அமைத்து வருகின்றனர். இக்குழுவினரை வாரந்தோறும் சந்தித்து ஆலோசனை வழங்கி வருகின்றனர். தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்ளவும், விவசாயிகளின் விளைச்சலை பெருக்குவதற்கும், விற்பனை

வசதிகளை அதிகரிப்பதற்கும் உதவிகள், வழிகாட்டுதல்கள் வழங்கி வருகின்றனர். இதன் மூலம் விவசாயிகளுக்கு இருமடங்கு உற்பத்தியும், மும்மடங்கு லாபமும் கிடைக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். உதவி விவசாய அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்களின் பணிகளை நேரடியாக கண்காணித்து அரசுக்கு அறிக்கை வழங்க வேண்டும் என தோட்டக்கலைத்துறை உயர் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

## விவசாய உற்பத்தி அதிகரிப்பு

தேனி : விவசாய இணை இயக்குனர் திலகர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் சராசரி மழையளவு 829.8 மில்லி மீட்டர். நடப்பு ஆண்டு இந்த அளவு மழை கிடைத்துள்ளதால், மாவட்டத்தில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 677 எக்டேர் பரப்பில் அனைத்து தானியங்களும் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் 70 ஆயிரத்து 500 மெட்ரிக் டன்னும், சிறு தானியங்கள் ஒரு லட்சத்து ஆயிரத்து 800 டன்னும், பயறு வகைகள் 14 ஆயிரம் டன்னும், ஆக மொத்தம் ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 300 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு நெல் விதைகள் 210 டன், பயறு வகை விதைகள் 121 டன், எண்ணெய் வித்துகள் 77 டன், பருத்தி 1.4 டன் வழங்கப்பட்டுள்ளது, என்றார்.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## 22 பேருக்கு இலவச ஆடுகள்

உத்திரமேரூர், : உத்திரமேரூர் அடுத்த புலிவாய் கிராமத்தில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு புலிவாய் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் தலைமை தாங்கினார். உத்திரமேரூர் சேர்மன் கமலகண்ணன் முன்னிலை வகித்தார். உத்திரமேரூர் எம்எல்ஏ வாலாஜாபாத் கணேசன், 22 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகளை வழங்கினார்.

நாமகிரிப்பேட்டையில் 1725 மூட்டை மஞ்சள் ரூ 80 லட்சத்திற்கு விற்பனை

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில் நடந்த ஏலத்தில், 1725 மூட்டை மஞ்சள் ரூ 80 லட்சத்திற்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தில் (ஆர்.சி.எம்.எஸ்) மஞ்சள் ஏலம் நடந்தது. கடந்த வாரம் மஞ்சள் மூட்டை விலை ரூ 10 ஆயிரத்தை தாண்டியதால், இருப்பு வைத்திருந்த விவசாயிகள், தங்கள் மஞ்சளை விற்க முடிவு செய்தனர். இதனால், மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு குவிந்தது. ஏலத்திற்கு சராசரியாக 1000 மூட்டைகளே விற்பனைக்கு வரும். ஆனால், இந்த வாரம் 1700 மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன. விரலி ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ 9,314க்கும் குறைந்தபட்சம் ரூ 7,216க்கும் ஏலம் போனது. அதே போல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ 8,209க்கும் குறைந்தபட்சம் ரூ 6,260க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம் அதிகபட்சமாக ரூ 15,111க்கும் குறைந்தபட்சமாக ரூ 7,899க்கும் விலை போனது. விரலி 1247 மூட்டைகளும், உருண்டை 458 மூட்டைகளும், பனங்காலி 20 மூட்டைகளும் என மொத்தம் 1725 மூட்டைகளும் ரூ 80 லட்சத்திற்கு விற்பனையானது. கடந்த வாரம் விரலி ரகம் மூட்டை அதிகபட்சமாக ரூ 10,221க்கு விற்பனையானது.

## <u>தமிழக ‘கிரிராஜா’வுக்கு போட்டியாக ஆந்திரா ‘வனராஜா’ கோழிகள்</u>

போச்சம்பள்ளி, : தமிழகத்தின் கலப்பின கிரிராஜா கோழிகளுக்கு போட்டியாக, ஆந்திராவில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படும், வனராஜா கோழி குஞ்சுகளை பொது மக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். தமிழகத்தில் நாட்டு இனம் மற்றும் பிராய்லர் இனகோழிகளை இணைத்து கிரிராஜா எனப்படும் கலப்பின கோழிகள் உருவாக்கப்பட்டது. கிரிராஜா கோழிகள், பிராய்லர் கோழிகளை போல வேகமாக வளரும் இயல்புடையது. அதன் இறைச்சியும் ஓரளவு நாட்டு கோழி இறைச்சியை போலவே இருக்கும். இதனால், கிரிராஜா வகை கோழிகளை நாட்டு கோழி என கூறி வியாபாரிகள் விற்பனை செய்வதும் உண்டு. இந்நிலையில், கிரிஜா கோழிகளுக்கு போட்டியாக, தற்போது வனராஜா எனப்படும் கோழிகுஞ்சுகளை ஆந்திரா மாநிலம், சித்தூரில் இருந்து வியாபாரிகள் வாங்கி வந்து விற்கின்றனர். டூவிலர்களில் கொண்டு சென்று போச்சம்பள்ளி,மத்தூர், அரசம்பட்டி, புலியூர்,

சந்தூர், உள்ளிட்ட தமிழகம் முழுவதும் விற்பனை செய்கின்றனர். இந்த கோழிகுஞ்சுகள் பொன் நிற இறக்கையுடன், முகம் மட்டும் கருப்பு நிறத்தில் இருக்கும். ஆந்திராவில் பிராய்லர் மற்றும் காட்டு இன கோழிகளை இணைத்து, வனராஜா கோழிகுஞ்சுகளை உற்பத்தி செய்கின்றனர். வனராஜா இன கோழி இறைச்சி, காட்டுக்கோழி இறைச்சியை போல சுவையாக இருக்கும். இதன்படி, 8 வனராஜா கோழி குஞ்சுகள் ரூ100 க்கு விற்பனை செய்கின்றனர். இந்தவகை கோழிகள் பொன் நிறத்தில் காணப்படுவதால் கிராம மக்கள் இதை ஆர்வத்துடன் வாங்கி வளர்க்கின்றனர்.

## <u>கோவை ஏல மையத்தில் ரூ.3.10 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனை</u>

கோவை, : கோவை தேயிலை ஏல மையத்தில் கடந்த ஆண்டின் இறுதி ஏலம் கடந்த 31ம் தேதி மாலை முதல் இரவு வரை நடந்தது. இதில் தேயிலைத்தூள் உள்ளூர் ரகம்(டஸ்ட்) 3.42 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.77 லட்சம் கிலோ விற்பனையானது. 81 சதவீதம் விற்பனையாகியுள்ளது. 160 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.79.13. விற்பனை மதிப்பு ரூ.2.19 கோடி. ஏற்றுமதி ரகம்(லீப்) 1.80 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.28 லட்சம் கிலோ விற்பனையானது. 72 சதவீதம் விற்பனையானது. 103 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை ரூ.70.68. விற்பனை மதிப்பு ரூ.91 லட்சம்.கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், 'உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.1.68ம், ஏற்றுமதி ரகம் ரூ.1.88ம் அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்த வாரம் ரூ.3.10 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரம் விற்றதை விட ரூ.9 லட்சம் அதிகமாகும். விற்பனை அதிகரித்ததால் வர்த்தகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>திருச்சியில் 69.40 மி.மீ மழைபதிவு</u>

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் 69.40 மி.மீ மழை பெய்தது. அதிகபட்சமாக தா.பேட்டையில் 25.50 மி.மீ மழையும், குறைந்த பட்சமாக லால்குடியில் 1.30 மி.மீ மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டம் மருங்காபுரி, முசிறி, புள்ளம்பாடி, துறையூர், ஏர்போர்ட், திருச்சி டவுன், பொன்னனியாறு அணை, நவலூர்

குட்டப்பட்டு, நந்தியார் தலைப்பு, கல்லக்குடி, வாத்தலை அணைக்கட்டு, சமயபுரம், தேவிமங்கலம், சிறுகுடி, புலிவலம், கோவில்பட்டி, பொன்மலை, துவாக்குடி உள்ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்ய வில்லை. மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரையிலும் 24 மணி நேரம் பெய்த மழை அளவு(மி.மீ) விவரம்: லால்குடி 1.30, தா.பேட்டை 25.50, குப்பம்பட்டி 25, தென்பரநாடு 17. மொத்தம் 69.40 மி.மீட்டர் மழையும், சராசரியாக 2.78 மி.மீட்டர் மழையும் பெய்துள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.3.75 லட்சத்திற்கு பருத்தி ஏலம்**

திருச்சி, : திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த மறைமுக ஏலத்தில் 10,602 கிலோ பருத்தி ரூ.3 லட்சத்து 75ஆயிரத்து 502க்கு ஏலம் போனது. திருச்சி மாவட்டத்தில் பருத்தி பயிர் மானவாரியாக 16,453 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக ஏலம் துவங்கப்பட்டது. அங்கு இரண்டாவது முறையாக நேற்றுமுன்தினம் மறைமுக ஏலம் நடைபெற்றது. கோட்டாத்தூர், நடுவலூர், ஒரத்தூர், புதுப்பட்டி, உப்பிலியாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து 45 விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். நேற்று 286 மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. நாமக்கல், பெரம்பலூர், வேங்கடத்தானூர், வாலையூர் பகுதியிலிருந்து வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். ஒரு கிலோ பருத்தி அதிக பட்சமாக ரூ.40.20க்கு ஏலம் போனது. குறைந்தபட்சமாக ரூ38க்கு ஏலம் போனது. இதில் மொத்தம் 10,602 கிலோ பருத்தி ரூ.3லட்சத்து 75ஆயிரத்து 502க்கு ஏலம் போனது. அடுத்த ஏலம் வருகிற 7ம்தேதி (புதன்) நடைபெறும். துறையூர் உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி சாகுபடி செய்து அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபொருட்களை துறையூர் ஒழுங்குமுறை விற்பணை கூடத்திற்கு எந்தவித கமிஷனும் இன்றி மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெற்று பயனடையுமாறு திருச்சி கலெக்டர் பழனிச்சாமிகேட்டுக்கொண்டுள்ளார்.

## கரூர் மாவட்டத்தில் சராசரியை விட அதிக மழை விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர், : கரூரில் 250 மிமி மழை பெய்துள்ளது. சராசரியைவிட அதிக மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கரூர் மாவட்டத்தின் சராசரி மழை அளவு 743 மிமீ. 2013ம் ஆண்டு மழை அளவு 489 மிமீ. கடந்த 2014ம் ஆண்டில் அதிக அளவாக 568.92 மிமீ மழை பெய்தது. 13 சதவீதம் அளவுக்கு அதிக மழை பெய்தது. இந்நிலையில் நடப்பாண்டில் நேற்று முன்தினம் நல்ல மழை பெய்துள்ளது. மழை அளவு-(மி.மீ.) அரவக்குறிச்சி 2.80, க.பரமத்தி 68, மாயனூர் 26, கரூர் 9, அணைப்பாளையம் 92, பஞ்சப்பட்டி 5.40, பாலவிடுதி 2.40, கடவூர் 7.40, கிருஷ்ணராயபுரம் 35, மயிலம்பட்டி 2.50, அதிகபட்சமாக அணைப்பாளையத்தில் 92 மிமீ அளவுக்கு மழை பெய்துள்ளது. சராசரியாக 20.88, மொத்தம் 250.50 மிமீ மழையும் பெய்தது. நல்ல மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த ஆண்டை விட அதிக அளவு மழை பெய்துள்ளதால் திட்டமிட்டபடி பயிர்களை சாகுபடி செய்ய இயலும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## வேகமாக வெளியேறும் கல்லாற்று நீரால் விசுவக்குடி அணை நடப்பாண்டிலேயே நிரம்பும் விவசாயிகள் நம்பிக்கை

பெரம்பலூர், : வேகமாக வெளியேறும் கல்லாற்று ஓடை நீரால் விசுவக்குடி அணை நடப்பாண்டிலேயே நிரம்பி விடும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பெரம்பலூர் மாவட் டம், வேப்பந்தட்டை தாலுகா, அன்னமங்கலம் விசுவக்குடி அருகே பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மூலமாக செம்மலை, பச்சைமலை என இருமலைகளின் இடையே ரூ.19கோடியில் 665மீட்டர் நீளமுள்ள கரையுடன் அணைக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. இந்த அணைக்கட்டு மூலம் 30.67 மில்லியன் கனஅடி நீரை, 10.30மீட்டர் ஆழத்திற்கு சேமிக்க இயலும். இந்த அணைக்கட்டு அமைப்பதற்காக கூடுதலாக மறுமதிப்பீட்டின்படி ரூ.14.07 கோடி சேர்த்து தற்போது ரூ.33.07கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அணையின்மூலம் நேரடியாக 859ஏக்கர் புன்செய்நிலம் பாசனவசதி பெறும். மேலும் மதகின்மூலம் வெங்கலம் ஏரியின் கீழுள்ள சுமார் 421.01ஏக்கர் ஆயக் கட்டிற்கு உறுதி செய்யப்பட்டநீரும், நிலத்தடிநீர் செறிவூட்டப்படுவதால் கிணற்றுப் பாசனம்மூலம் கூடுதலாக 169 ஏக்கர்

புன்செய் நிலங்களும் பாசனவசதி பெற வழிசெய்யப்பட்டுள்ளது. மேலும் மறைமுகமாக 2ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும். அணையில் தேக்கப்படவுள்ள 30.67மில்லியன் கனஅடி நீருடன், அணையின் உட்புறம் ஆழப்படுத்துவதன் மூலம் மேலும் 10மில்லியன் கனஅடி நீரை சேமிக்கும் வகையில் மாநில திட்டக்குழுவிற்கு ரூ.3.30கோடி மதிப்பில் புதிய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த ஐந்தாறு வருடங்களாக இந்த கல்லாற்று ஓடையில் வெள் ளப்பெருக்கே ஏற்படாத நிலையில், கடந்த 2011க்குப் பிறகு ஆண்டு சராசரியைவிட குறைவான மழைபெய்து வரும் நிலை யில் விசுவக்குடி அணை எப்போது நிரம்பும் என்றக் கேள்வி விவசாயிகள் மத்தியில் இருந்துவந்தது. இந்நிலையில் நடப்பாண்டு சராசரி அளவைத்தாண்டி மழைபெய்யும் வாய்ப்புள்ளதாக கூறப்படுவதாலும், அதன் அறிகுறி யாக ஜனவரி 1ம்தேதி மட்டுமே வேப்பந்தட்டை தாலுக்காவில் உள்ள வேப்பந்தட்டை சுற்றுவட்டாரப் பகுதிகளில் 84மிமீ, தழுதாழை சுற்றுவட்டாரப் பகுதிகளில் 43மிமீ மழை பதிவாகியிருப்பது மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அணையின் மூடப்படாத ஒருபகுதியில் இருந்து கல்லாற்று ஓடைநீர் வேகமாக வெளியேறி வருகிறது. இதுபோல் நடப்புஆண்டில் மழைபெய்தால் 2015ம் ஆண்டிலேயே விசுவக்குடி அணைக்கட்டு நிரம்பும் என விவசாயிகள் நம்பிக்கை தெரி வித்துள்ளனர். இதன்மூலம் விசுவக்குடி அணைக் கட்டு, பெரம்பலூர் மாவட்டத்தின் பிரதான சுற்றுலாதலமாக மாறிவிடும் என நம்பப்படுகிறது.

## தேசிய வேளாண் திட்டத்தில் பயிர்களை காப்பீடு செய்திட விவசாயிகளுக்கு அழைப்பு

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல், கரும்பு, தானியங்கள, நிலக்கடலை, உளுந்து உள்ளிட்ட பயிர்களுக்கு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கடன் பெறும், கடன் பெறா சிறு, குறு, இதர விவசாயிகள் தேசிய வேளாண் திட்டத்தின் கீழ் பயிர்களை காப்பீடு செய்து பயன்பெறுமாறு வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆண்டு ராபி பருவத்துக்கு மத்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் சார்பில் தேசிய வேளாண் காப்பீடு திட்டம்

மத்திய, மாநில அரசுகளால் அமல்படுத்தப்பட்டுளளது. நெல், கரும்பு, மக்காச்சோளம், உளுந்து, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கடன் பெறும், கடன் பெறாத சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். சிறு, குறு மற்றும் கடன் பெறாத விவசாயிகள் தாங்கள் பயிரிடும் நெல் (நவரை), மக்காச்சோளம் ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்திட இம்மாதம் 31ம் தேதி கடைசி நாளாகும். உளுந்து பயிருக்கு பிப்ரவரி 15 கடைசி நாளாகும். கரும்பு பயிருக்கு ஜுலை மாதம் 15ம் தேதி கடைசி நாளாகும். கடன் பெறாத, சிறு குறு மற்றும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு நெற்பயிருக்கு ரூ.185, மக்காச்சோளப் பயிருக்கு ரூ.160, உளுந்து பயிருக்கு ரூ.49, கரும்பு பயிருக்கு 1875 வீதம் பிரிமியத் தொகை செலுத்தவேண்டும். கடன் பெறும் மற்றும் இதர விவசாயிகளுக்கு ஏக்கருக்கு நெல் பயிருக்கு ரூ.206, மக்காச்சோள பயிருக்கு ரூ.178, உளுந்து பயிருக்கு ரூ.54, கரும்பு பயிருக்கு ரூ.2083 வீதம் பிரியம் செலுத்த வேண்டும். கடன்பெறும் மற்றும் இதர விவசாயிகளுக்கு நெல் மற்றும் மக்காச்சோள பயிருக்கு காப்பீடு செய்திட பிப்ரவரி 28 கடைசி நாளாகும். உளுந்து பயிருக்கு மார்ச் 31 கடைசி நாளாகும். கரும்பு பயிருக்கு ஜுன் 30ம் தேதி கடைசி நாளாகும். கூடுதல் மதிப்பில் காப்பீடு திட்டத்தில் சேர பிரிமியத் தொகையை விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். அவர்கள், சிட்டா அடங்கல் அல்லது விஏஓ சான்றிதழ் மற்றும் முன்மொழிவுப் படிவத்துடன் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரிமியம் செலுத்த வேண்டும். வங்கி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் அங்கேயே காப்பீடு திட்டத்தில் சேர்க்கப்படுவர்கள். மேலும், விவரங்களை சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள் அலுவலகத்தை தொடர்புகொண்டு விவசாயிகள் தங்கள் பயிரை காப்பீடு செய்து பயன்பெற வேண்டும்என்றார்.

**<u>வேளாண்மை தொழில் நுட்ப முகாம்</u>**

ராஜபாளையம், : ராஜபாளையம் வட்டார, வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகாம் மற்றும் திருந்திய செல் சாகுபடி பண்ணைப்பள்ளி பயிற்சி நடந்தது. தொழில் நுட்ப மேலாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ், திருந்திய செல் சாகுபடி பண்ணைப்பள்ளி பயிற்சி கம்மாபட்டி கிராமம் விவசாயி

கண்ணன் வயலில் நடந்தது. வேலாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். கூட்டத்தில், 'விவசாயிகளுக்கு உரநிர்வாகம் பற்றி தொழில் நுட்ப ஆலோசனைகள்' வழங்கப்பட்டது. வேலாண்மை அலுவர் ஜெயராமன் உரம் மற்றும் உயிர் உரங்கள் நெல் வயலில் எவ்வாறு இடவேண்டும் என விளக்கிக்கூறினார். முன்னோடி விவசாயி பொன்னுச்சாமி உரம் உபயோகப் படுத்தும் முறைகளை தெளிவு படுத்தினர். இந்நிகழ்ச்சியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் வனஜா, உதவி தொழில் நுட்ப மேலாளர் சசிகுமார், கிருஷ்ணசங்கீதா கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சிதம்பரம் பகுதியில் பொங்கல் பண்டிக்கைக்கு பன்னீர் கரும்புகள் தயார்**



சிதம்பரம், சிதம்பரம் பகுதியில் பொங்கல் பண்டிகைக்கான பன்னீர் கரும்புகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

பொங்கல் பண்டிகை

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக இருப்பது தைதிருநாளான பொங்கல் பண்டிகையாகும். இந்த பண்டிகை பஞ்ச பூதங்களுக்கு நன்றி சொல்லும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் கரும்பு கடிக்காமல் பொங்கல் உண்டா? என்பது போன்று, மஞ்சள், இஞ்சி ஆகியனவும் இப்பண்டிகையில் முக்கிய இடம் பிடிக்க கூடியதாகும். இதில் பழங்கால தமிழர்கள் கரும்பு சுவைப்பதை அவர்களது வாழ்க்கையோடு ஒப்பிட்டு பார்த்துள்ளார்கள்.

மனித வாழ்வோடு கரும்பை ஒப்பீடு

அதாவது, கரும்பில் எல்லா பகுதியும் இனிப்பை தருவதில்லை. நுனிக்கரும்பு, அடிக்கரும்பு ஆகியன தனித்தனி சுவை தரும். அதுபோல் தான், வாழ்க்கையில் மனிதர்கள் முன்னேற கடின உழைப்பு அவசியம். இது ஆரம்பத்தில்

நுனிக்கரும்பை போன்று இனிமையை தராது. ஆனால் போகபோக அடிக்கரும்பின் இனிப்பை போல் அதிகளவில் வாழ்க்கையில் மகிழ்ச்சியை தரும். மேலும் கரும்பின் வெளிப்புறம் கரடு முரடானதாகவும், வளைவுகளும், முடிச்சுகளும் நிறைந்து இருக்கும். அதாவது வாழ்க்கையில் எத்தனை கடுமையான சோதனைகள் இருந்தாலும், அவற்றை கடும் முயற்சியோடு, எதிர்கொண்டால் இனிமையான வாழ்வை சுவைக்க முடியும் என்பது தான் கரும்பு உணர்த்துவதாக, பழம் தமிழர்கள் அவர்களது வாழ்வோடு கரும்பை ஒப்பிட்டு வைத்தனர்.

<u>சாகுபடி</u>

இவ்வாறு பொங்கல் பண்டிகையின் போது பயன்படுத்தப்படும் ஒவ்வொரு பொருளும் பலவற்றை உணர்த்தும் விதமாக அமைந்திருக்கும். எனவே இதற்கு தேவையான வேளாண் பொருள்களை விவசாயிகள் உற்பத்தி செய்து, அறுவடைக்கு தயாராகி விட்டன. கடலூர் மாவட்டத்தை பொறுத்தவரையில் விருத்தாசலம், சிறுபாக்கம் பகுதியில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. சிதம்பரம், அகரநல்லூர், பழையநல்லூர், சாலியந்தோப்பு, அல்லிவிளாகம், வாளக்கொல்லை, ராமநத்தம், குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. <u>அறுவடைக்கு தயார்</u>

10 மாத பயிரான கரும்பு தற்போது நன்கு செழித்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. பொதுவாக சிதம்பரம் பகுதியில் சாகுபடி செய்யக்கூடிய பன்னீர் கரும்புகளுக்கு தனி மவுசு உண்டு என்று விவசாயிகள் கூறுகின்றனர். ஏனெனில் இங்கு களிமண் நிலங்களில் கரும்புகள் வளர்கின்றன. ஆகையால், இக்கரும்புகள் அனைத்தும் நல்ல நிறத்தோடும், சுமார் 10 நாட்களுக்கு மேல் வைத்து சாப்பிடக்கூடிய வகையில் இருக்கும். எனவே சென்னை, வேலூர், காஞ்சிபுரம், ஆரணி, திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் நேரடியாக சிதம்பரத்துக்கு வந்து, கரும்புகளை கொள்முதல் செய்கின்றனர்.

<u>ஒரு கரும்பு 13 ரூபாய்</u>

இன்னும் பொங்கல் பண்டிகைக்கு 10 நாட்களே எஞ்சியுள்ள நிலையில், சிதம்பரம் பகுதியில் சில இடங்களில் கரும்பு அறுவடை தொடங்கியுள்ளது. இன்னும் ஓரிருநாட்களில் கரும்பு அறுவடை தீவிரம் அடைந்து லாரிகளில்

வெளிமாவட்டத்திற்கு இங்கிருந்து ஏற்றி அனுப்பப்பட உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். இது குறித்து பழையநல்லூர் விவசாயி செந்தில் என்பவர் கூறுகையில், கடந்தை ஆண்டை விட, இந்த ஆண்டு குறைந்த அளவிலேயே கரும்பு பயிரிட்டுள்ளோம். கடந்த ஆண்டு கரும்பு ஒன்று ரூ.8 வீதம் வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். ஆனால் தற்போது ரூ.13–க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் ஒரு கட்டிற்கு 20 கரும்புகள் என்கிற அடிப்படையில் மொத்தம் ரூ.260 வரையில் கிடைக்கிறது என்றார்.

## வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய சக்தி மின் உலர்த்திகள் கலெக்டர் சுரேஷ்குமார் தகவல்



கடலூர், வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய சக்தி மின் உலர்த்திகள் வழங்கப்படுவதாக கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மின் உலர்த்திகள்

கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் சூரிய சக்தி மின் உலர்த்திகள் 50 சதவீதம் மானிய விலையில் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு சூரிய சக்தி மின் உலர்த்திக்கான மானிய தொகை அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வழங்கப்படுகிறது. சூரிய சக்தி மின் உலர்த்திகள் பாலிகார்பனேட் கூரையை கொண்டது. 2 முதல் 3 வரையிலான காற்று வெளியேற்றும் விசிறிகளை கொண்டது. பாலிகார்பனேட் கூரை பசுமை குடில் தன்மை கொண்டது. சுமார் 400 சதுர அடி பரப்பளவு கொண்ட சூரிய சக்தி மின் உலர்த்தி வாழைப்பழம், தக்காளி, தேங்காய், மஞ்சள் மற்றும் மருத்துவ குணம் உடைய வேளாண்மை பொருட்கள் உலர்த்திட பன்படுத்திக்கொள்ளலாம்.

நெறிமுறைகளுக்குட்பட்டு

எனவே விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இத்திட்டத்தில் அட்டவணை, பழங்குடியின விவசாயிகள், சிறு மற்றும் குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் பொதுப் பிரிவினருக்கும் திட்ட நெறிமுறைகளுக்குட்பட்டு மேற்படி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் இத்திட்டம் தொடர்பான விவரங்களை கடலூர், சிதம்பரம் மற்றும் விருத்தாசலம் உதவி செயற்பொறியாளர்களை(வேளாண்மை பொறியியல் துறை) அணுகி அறிந்து கொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## <u>அந்தியூர் வறட்டுப்பள்ளம் அணையில் இருந்து 4 ஏரிகளுக்கு இன்று தண்ணீர் திறப்பு</u>



அந்தியூர், அந்தியூர் வறட்டுப்பள்ளம் அணையில் இருந்து 4 ஏரிகளுக்கு இன்று தண்ணீர் திறக்கப்படுகிறது.

<u>வறட்டுப்பள்ளம் அணை</u>

அந்தியூரில் மேற்கு மலைத்தொடர்ச்சியில் 2 மலைகளுக்கு இடையே கட்டப்பட்ட அணை வறட்டுப்பள்ளம் அணையாகும். இந்த அணையின் முழு கொள்ளளவு 33.33 அடியாகும். பர்கூர் மலைப்பகுதியில் இருந்து பெய்யும் மழைநீர் கும்பரவாணி பள்ளம், கல்லுப்பள்ளம், வறட்டுப்பள்ளம் ஆகிய நீர் ஓடைகளில் வழியாக அணைக்கு வருகிறது. அதனால் மலைப்பகுதியில் வாழும் வனவிலங்குகளுக்கு நீர் ஆதாரமாகவும் அந்தியூர் பகுதியில் உள்ள ஏரிகள் மற்றும் கிணறுகளுக்கு நீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது. அணையின் உபரிநீர் அந்தியூரை சுற்றியுள்ள பெரிய ஏரி, சந்தியபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரி ஆகிய ஏரிகளுக்கு திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் கிணறுகளின் நீர்மட்டம் உயரும். விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

<u>ஏரிகளுக்கு தண்ணீர் திறப்பு</u>

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அந்தியூர் பகுதியில் பெய்த மழையில் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியது. இதையடுத்து

அணையில் இருந்து ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தனர்.

அதை ஏற்று அணையில் இருந்து ஏரிகளுக்கு இன்று (திங்கட்கிழமை) முதல் 9 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**<u>பொங்கல் பண்டிகையையொட்டி சித்தோடு மார்க்கெட்டில் 162 டன் வெல்லம் விற்பனை</u>**



பவானி, பொங்கல் பண்டிகையையொட்டி சித்தோடு மார்க்கெட்டில் 162 டன் வெல்லம் விற்பனை ஆனது.

<u>வெல்லம் ஏலம்</u>

பவானி அருகே உள்ள சித்தோடு வெல்ல மார்க்கெட்டில் வாரந்தோறும் சனிக்கிழமை நாட்டு சர்க்கரை, உருண்டை வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் ஏலம் நடைபெறும். நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு பவானி, அந்தியூர், ஆப்பக்கூடல், அம்மாபேட்டை, கோபி, பெருந்துறை, பெருந்தலையூர், தர்மபுரி, சாம்ராஜ் நகர் ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் நாட்டு சர்க்கரை, உருண்டை வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 30 கிலோ கொண்ட 3 ஆயிரம் மூட்டை அச்சு வெல்லம் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது ஒரு மூட்டை ரூ.1000 முதல் ரூ.1,170 வரை ஏலம் போனது. உருண்டை வெல்லம் 30 கிலோ எடை கொண்ட 4 ஆயிரத்து 500 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது ஒரு மூட்டை ரூ.1,050 முதல் ரூ.1,100 வரை ஏலம் போனது.

<u>162 டன் விற்பனை</u>

இதேபோல் 60 கிலோ எடை கொண்ட நாட்டு சர்க்கரை 3 ஆயிரம் மூட்டை கொண்டு வரப்பட்டு இருந்தன. இது ஒரு மூட்டை ரூ.600 முதல் ரூ.1,900 வரை ஏலம் போனது. இந்த ஏலத்தில் அச்சு வெல்லம் 9 டன்னும், நாட்டு சர்க்கரை 18 டன்னும், உருண்டை வெல்லம் 135 டன்னும் என மொத்தம் 162 டன் வெல்லம் விற்பனை ஆனது. சென்னை, மதுரை, தூத்துக்குடி, கோவை, தாராபுரம்,

உடுமலைப்பேட்டை, திண்டுக்கல் ஆகிய பகுதியைச் சேர்ந்த வியாபாரிகளும் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் இருந்து வந்த வியாபாரிகள் வெல்லத்தை ஏலம் எடுத்துச் சென்றனர். தரக்கட்டுப்பாடு உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் சோதனை செய்யப்பட்ட பின்னர்தான் இந்த ஏலம் நடத்தப்படுவதாக சங்கத்தின் தலைவர் கோபால், செயலாளர் அருணாச்சலம் ஆகியோர் தெரிவித்தனர்.

## அந்தியூர் கால்நடை சந்தையில் பசுமாடு ஒன்று ரூ.45 ஆயிரத்துக்கு விற்பனை



அந்தியூர், அந்தியூர் கால்நடை சந்தையில் பசுமாடு ஒன்று ரூ.45 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

### கால்நடை சந்தை

அந்தியூரில் வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடக்கும். இதில், ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் சேலம் மாவட்டம் கொளத்தூர், பண்ணவாடி, மேட்டூர் மற்றும் கர்நாடக மாநிலம் வேலாம்பட்டி, ராமபுரம் ஆகிய பகுதிகளில் இருந்தும் விற்பனைக்காக கால்நடைகளை கொண்டு வரப்பட்டன. வருகிற 15–ந்தேதி மாட்டுப்பொங்கல் தினம் ஆகும். இதையொட்டி விவசாயிகள் தங்களது தோட்டங்களில் கால்நடைகளுக்கு பொங்கல் வைத்து கொண்டாடுவார்கள். அதனால் கடந்த வாரத்தை விட இந்த வாரம் அந்தியூர் கால்நடை சந்தைக்கு மாடுகள் குறைவாக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதனால் மாடுகளின் விலை அதிகமாக இருந்தது.

### ரூ.45 ஆயிரத்துக்கு விற்பனை

உழவு மாடு ஒன்று ரூ.10 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரையும், சிந்து இனபசுமாடு ஒன்று ரூ.20 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரையும், ஜெர்சிஇன பசு மாடு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.42 ஆயிரம் வரையும் விற்றது. மலைமாடு ஒன்று ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை விற்பனை ஆனது. கொங்கன் இன பசுமாடு ஒன்று ரூ.20 ஆயிரம் முதல் ரூ.35 ஆயிரம் வரையும், பசுமாடு

ஒன்று ரூ.40 ஆயிரம் முதல் ரூ.45 ஆயிரம் வரையும், எருமை மாடு ஒன்று ரூ.25 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரையும் விற்பனை செய்யப்பட்டன. ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கோவை, மேட்டுப்பாளையம் மற்றும் கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்தும் வந்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் மாடுகளை விலைக்கு பிடித்துச்சென்றனர்.